**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**
**ந.க.எண்:1222/மாஒ5/பநேப/ஒபக/2023-2024, நாள்: 07.08.2023**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம் - அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேரப் பயிற்றுநர்கள் (உடற்கல்வி (Physical Education)) நிர்ணயிக்கப்பட்ட மாணாக்கர்கள் விகிதாசாரப்படி தகுதி பெறும் பள்ளிகளில் பணியாற்றிட கலந்தாய்வு மூலம் பணியிடமாறுதல் செய்தல் தகவல் தெரிவித்தல் தொடர்பாக.

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் செயல்முறைகள், சென்னை-06, ந.க.எண்.2665/C1/பநேப/ஒபக/2023, நாள்:1.8.2023.

-------

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம், பார்வையில் கண்ட மாநில திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, 10.09.2022 அன்று வெளியிடப்பட்ட தமிழக அரசின் செய்தி குறிப்பின்படி "பகுதி நேரப் பயிற்றுநர்களுக்கு விருப்பத்திற்கேற்ப இணைய வழியில் ஒளிவு மறைவற்ற இடமாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும்" என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின்படி பகுதிநேரப் பயிற்றுநர்கள் (ஓவியம், இசை, தையல், கைத்தொழில்) இடமாறுதல் கலந்தாய்வு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

தற்போது பகுதி நேரப் பயிற்றுநர்களுக்கு (உடற்கல்வி) (Physical Education) முதலில் பணிநிரவல் கலந்தாய்வும், பின்னர் மாவட்டத்திற்குள்ளும் அதன் பின்னர் மாவட்டம் விட்டு மாவட்டம் கலந்தாய்வும் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகுதி நேரப் பயிற்றுநர்கள் பணிமாறுதல் கலந்தாய்வின் போது கீழ்க்கண்ட நெறிமுறைகளை கடைபிடித்தல் வேண்டும்.

1. மேற்குறிப்பிட்ட பகுதிநேரப் பயிற்றுநர்களுக்கு கலந்தாய்வு 29.08.2023 அன்று நடத்தப்பட வேண்டும் என பார்வையில் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. மாறுதல் கோரும் பகுதி நேரப் பயிற்றுநர்கள், விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சார்ந்த தலைமையாசிரியரிடம் 16.08.2023-க்குள் சமர்பிக்க வேண்டும். மேலும், விவரங்களை, EMIS இணையதளத்தில் 17.08.2023 க்குள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். பதிவு செய்த பிறகு EMIS இணையதளத்திலிருந்து பெறப்படும் ஒப்புதல் நகலை தங்கள் வசம் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு நகலைத் தலைமையாசிரியர் மாவட்டத் திட்ட அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக நேர்முக உதவியாளார் (மேல்நிலை), நேர்முக உதவியாளர் (உயர்நிலை), மாவட்ட திட்ட அலுவலக உதவி திட்ட

அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர் உள்ளடக்கிய குழு, முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் தலைமையில் இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் EMIS இணையதளத்தில் முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை 18.08.2023 பிற்பகல் 5.30 மணிக்குள் உறுதி செய்ய வேண்டும் எனவும், மேற்காண் குழு பகுதி நேரப் பயிற்றுநர்களின் (உடற்கல்வி) மாறுதல் விண்ணப்பங்களை முறையாக பதிவேட்டில் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் மாணவர்கள் எண்ணிக்கை 100 அல்லது அதற்கு மேல் பயிலும் பள்ளிகளுக்கு மட்டுமே பணிமாறுதல் வழங்கப்படும்.
5. முறையான பணியிடத்தில் நியமனம் பெற்ற உடற்கல்வி ஆசிரியர்கள் (Physical Education – Regular Teachers) பணிபுரியும் பள்ளிகளில் உள்ள காலிப்பணியிடங்களுக்கு பணிமாறுதல் வழங்கப்படமாட்டாது.
6. பணிமாறுதல் மூலம் காலிப்பணியிடம் ஏற்படும் பள்ளிகளில் 100 மாணவர்களுக்கு மிகுதியாக இருந்தால் அவ்விடம் காலிப்பணியிடமாக காட்டப்படும் (Resultant Vaccancy)
7. மாறுதல் பெறும் பகுதி நேரப் பயிற்றுநர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் மாறுதல் பெற்ற பள்ளியில் உடன் பணியில் சேர வேண்டும். மாவட்ட திட்ட அலுவலகத்திலிருந்து தொகுப்பறிக்கையினை மாநில திட்ட அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டி உள்ளதால் சார்ந்த தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியிலிருந்து மாறுதல் பெற்றிருந்தால்லோ / வேறு பள்ளியிலிருந்து தங்கள் பள்ளிக்கு மாறுதல் பெற்று பணியில் சேர்ந்தால்லோ அதன் விவரத்தை மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு உடன் சமர்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகறிது.
8. பகுதி நேரப் பயிற்றுநர்களின் விருப்பத்தின் பேரில் மாறுதல் ஆணை பெறுவதால் இவ்வாணையை ரத்து செய்யவோ அல்லது மாற்றம் செய்யவோ கோரும் கோரிக்கைகள் பரிசீலிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
9. ஒரே பணியிடத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பகுதி நேரப் பயிற்றுநர்கள் பணி மாறுதல் கோரினால் கீழ்க் குறித்த தரவுகள் அடிப்படையில் முன்னுரிமை வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

II. முன்னுரிமை:

viii. "முற்றிலும் கண் பார்வையற்றவர்"

ix. "மாற்றுத்திறனாளிகள் (40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் உள்ளவர்கள்)

x. "மனவளர்ச்சி குன்றிய / மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்"

xi. "சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை / டையாலிசிஸ் சிகிச்சை இருதய அறுவை சிகிச்சை / புற்று நோயாளிகள் / மூளை கட்டி நோயால் பாதிக்கப்பட்டோர்.

xii. இராணுவத்தில் பணிபுரியும் துணைவர் உடையவர்கள்.

xiii. கணவன் / மனைவி பணிபுரியும் இடத்திலிருந்து 30 கிலோ மீட்டர் அப்பால் பணிபுரிபவர்கள்.

III. ப்குதி நேரப் பயிற்றுநராக பணியில் சேர்ந்த நாள்

IV. பிறந்தநாள்

(முன்னுரிமை கோரும் விவரங்கள் தவறு எனக்கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்)

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம் – 6

இணைப்பு:

1. பகுதி நேரப் பயிற்றுநர்களின் பணிமாறுதல் விண்ணப்பப் படிவம் (EMIS தளத்தில்).

**பெறுநர்:**

1. அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம். (உரிய வழியாக)
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

**நகல்:**

1. மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது. (சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தகவல் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு).
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.
4. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), வேலூர் மாவட்டம்.

பகுதி நேரப் பயிற்றுநர்கள் (உடற்கல்வி)

விருப்பமாறுதல் கோரும் விண்ணப்பப் படிவம் - 2023 - 2024

(மாவட்டத்திற்குள் / மாவட்டம் விட்டு மாவட்டம்)

| வ. எண். | பொருள் | | |
|---|---|---|---|
| 1. | பகுதி நேரப் பயிற்றுநர் பெயர் | : | |
| | பாலினம் | : | |
| | ii) கைபேசி எண். | : | |
| | iii) பிறந்த நாள் | : | |
| 2. | பாடம் (உடற் கல்வி) | : | |
| 3. | பகுதி நேரப் பயிற்றுநராக பணியில் சேர்ந்த நாள் | : | |
| 4. | தற்போது பணியாற்றும் விவரம் | | |
| | i) பள்ளியின் பெயர் | : | |
| | ii) தற்போதைய பள்ளியில் பணியில் சேர்ந்த நாள் | : | |
| | iii) வட்டாரம் | : | |
| | iv) மாவட்டம் | : | |

| | | | |
|---|---|---|---|
| | v) 6 முதல் 8 வரை உள்ள வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை விவரம். (தலைமை ஆசிரியரால் நிரப்பப்பட வேண்டும்) | : | |
| 5 | மாறுதல் கோரும் விவரம் | | |
| | மாவட்டத்தின் பெயர் | : | |
| | வட்டாரத்தின் பெயர் | : | |
| 6 | மாறுதல் கோருவதற்கான காரணம் | : | |
| 7 | நிரந்தர வீட்டு முகவரி | : | |
| 8. | முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரினால் அதன் விவரம் (உரிய சான்று இணைக்கப்பட வேண்டும். | : | |

மேற்காண் விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என உறுதி அளிக்கிறேன்.

பகுதி நேரப் பயிற்றுநரின் கையொப்பம்

படிவத்திலுள்ள விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

தலைமையாசிரியர்      மாவட்ட உதவித் திட்ட அலுவலர்